# பெண்கள் செய்திமடல்

சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்

மடல் - 14:4 மார்கழி 2012



- வீட்டில் இருந்தே சமாதானம்.....
- புத்தாண்டே நீ வருக....
- பட்டகாலிலே பட்டாலும்.......
- பெண்களை வலுப்படுத்தல்.....
- அக்கரைப்பற்று பெண்கள் அமைப்பு....
- இது வயதுவந்தோர் உரிமைகள் மட்டுமல்ல...
- ஞாபகங்கள்....


"பெரிய அளவில் சிந்தித்து எதுவுமே செய்யமுடியாமல் கவலைப்படுவதை விட எம்மால் முடிந்ததை சிந்தித்து செய்வது மிகவும் பயனுள்ளது."

ஆசிரியை

## "வீட்டில் இருந்தே சமாதானம்....

### சர்வதேச பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான செயல்வாத வாரம்



ஒவ்வொரு நிகழ்வுகளுடனும் ஒவ்வொரு வரலாறு உள்ளது. இவ்வாறான வரலாற்றுடன் தொடர்பு பட்டதுதான் இன்று நாம் அனுட்டித்துவரும் பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான செயல்வாத வார நிகழ்வுகளாகும். சம்பவங்கள் நடந்து கொண்டுதான் உள்ளன. எனினும் சில சம்பவங்கள் தொடர்ச்சியாக நடைபெறும் போது அது ஒரு பாரிய தாக்கத்தைச் செலுத்துகிறது. அது ஒவ்வொருவரினதும் வாழ்க்கையிலும் மாற்றத்தை ஏற்படுத்துவதுடன் இறந்தகாலம் நிகழ்காலம் எதிர்காலம் அனைத்துடனும் தொடர்புபட்டிருக்கிறது. இவ்வாறான பின்னணியைக் கொண்டதுதான் இப் பெண்களுக்கான 16 நாள் செயல்வாத வாரமுமாகும்.

"மனிதஉயிர்களின் மறு வடிவமாய் எம்மிடையே உயிர் வாழ்வது உயிர்களை வாழ்விப்பது புத்துயிர் அளிப்பது மரங்கள். யார் எதுசெய்தார், யார் எது செய்வார், யாரால் என்ன பயன், தெரிவுகள் எதுவுமின்றி வேற்றுமை இன்றி அனைவருக்கும் சமத்துவமாய் பலன் கொடுக்கும் நிலைத்திருக்கும் சக்தியே இம் மரங்கள்.



பெண்களுக்கெதிரான வன்முறைகளுக்கெதிரான செயல்வாத வாரத்தை யொட்டி தாழங்குடா பெண்கள் குழுவினர்.

1960-ல் நவம்பர் 25 அன்று டொமினிகன் ரிபப்ளிக்கின் சர்வாதிகாரி ர.்.பேல் ட்ருஜிலோ பெண்ணிய வாதிகளும் சுதந்திர போராளிகளுமான மிராபல் சகோதரிகளை கொடூரமாகக் கொலை செய்தார்.


டொமினிக் ரிபப்ளிக் நாட்டில் என்ரிக் மிராபல் என்பவருக்கும் மாரிய மெர்சிடெஸ் ரெய்ஸ் என்பவருக்கும் பிறந்தவர்கள் பாட்ரியா, மினர்வா, மரிய தெரசா மற்றும் தேதே சகோதரிகள். இந்த சகோதரிகள் ட்ருஜிலோ சர்வாதிகாரத்தை தீவிரமாக எதிர்த்த அரசியல் போராளிகள். ஜனநாயகத்திற்காக புரட்சிகர செயல்களில் ஈடுபட்ட இவர்கள் பலமுறை தங்கள் கணவன்மார்களோடு சிறைப்படுத்தப்பட்டனர். இச் சகோதரிகள் சிறையிலிருக்கும் இவர்களது கணவன்மாரை சந்திக்க காரில் செல்லும் போது கொடூரமாக கொல்லப்பட்டனர். இச் சகோதரிகளின், குரல்வளை நெரிக்கப்பட்ட சிதைக்கப்பட்ட உடல்கள் செங்குத்தான பாறை ஒன்றின் அடிவாரத்தில் கண்டெடுக்கப்பட்டன.

இதை நினைவு கூறும் வகையில் இந்த நாளை சர்வதேச பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்பு நாளாக அறிவித்தனர். இந்த வன்முறை சம்பவத்தை நினைவுகூறும் வகையில் 1981- ஆம் ஆண்டு ஜீலை 18-21 வரை உள்ள நாட்களில் கொலம்பியாவில் பொகாட்டா நகரில் லத்தீன் அமெரிக்கா, கரீபியன் நாடுகளுக்கான பெண்ணியவாதிகளின் கூட்டத்தில் தான் நவம்பர் 25 சர்வதேச பெண்கள் மீதான வன்முறை எதிர்ப்பு நாளாக அறிவிக்கப்பட்டது, அந்த மாநாட்டில், பெண்கள் மீதான வன்முறைகளான மனைவியை அடித்தலில் இருந்து பாலியல் பலாத்காரம் உட்பட அரசியல் பெண் கைதிகளின் மீது கட்டவிழ்த்துவிடும் சித்திரவதைகள் வரையிலான அனைத்து வகையான வன்முறை களையும் கண்டித்தனர். 1999-இல் ஐ.நா.சபையும் இந் நாளை சர்வதேச பெண்கள் மீதான வன்முறை ஒழிப்பு நாளாக உலகிற்கு அறிவித்தது.




---

# புத்தாண்டே நீ வருக



**புதுமுகங்களாய் ஒன்று சேர்ந்து**
**புத்தாண்டை வரவேற்போம்**
**இன்னலுற்று இன்பமின்றி வாழும்**
**மக்களின் குறை தீர்க்க**
**இனிய ஆண்டே நீ வருக!**

**வசந்தமின்றி பல காலமாய்**
**வடுக்களுக்கும் வேதனைகளுக்கும்**
**வாடிக்கையான மனங்களில் மணம்**
**வீச நீ வந்திருக்கின்றாய்**
**என எதிர்பார்க்கின்றோம்**

**2013 தென்றலே!**
**நொறுங்கிய உள்ளங்களுக்கு — நீ**
**ஆறுதல் வார்த்தையையும் சுதந்திரக்**
**காற்றையும் சுமந்து வருக!**

**மனித மனங்களிலும் மலர்கின்ற**
**மரங்களிலும் மகிழ்ச்சி**
**பொங்க நீ வருக!**

**கடந்த ஆண்டில் நம் சந்தித்த**
**சங்கடங்கள் அனைத்தையும்**
**அள்ளி வீசிட நீ வருக!**

சிதாரா

# பட்டகாலிலே பட்டாலும் கெட்டகுடியே கெட்டாலும் ...
# வாழ்ந்தே காட்டுவேன் ....

பட்ட காலிலே படும் கெட்ட குடியே கெடும் என்பதை விட்டு "குடியைக் கெடுத்தாலும் சரி காலில் பட்டது கண்ணில் பட்டாலும் சரி வாழ்ந்தே காட்டுவேன்".என வாழ்ந்து கொண்டிருப்பவள் தான் நமது நாயகி.

சிறுமியாய் இருக்கையில் கோயில் வீதிகளில் தண்ணித் துப்பாக்கி வாங்கி நண்பர்களுக்குள் பொலிசாக வலம் வந்த கனவு கலையுமுன் இனம் தெரியாதோரால், குழுக்களால் கடத்தப்பட்டு மனித உயிர் குடிக்கும் துப்பாக்கி கொடுக்கப்பட்டு பின் வாழ்வு, குடும்பம் தொலைத்து அங்கவீனமாக்கப் பட்டு கடைசியில் காய்ந்த கறிவேப்பிலையாய் கணக்கெடுக்கப்பட்ட பின் திருப்பி அனுப்பப்பட்டவள் இவள்.

விழுந்தாலும் எழும்ப வேண்டும் என்பதே மந்திரமாக அத்தனை துயரங்களையும் படிப்பினையாக எடுக்கும் தைரியம் எத்தனை பேருக்குண்டோ அதில் ஒருத்தியாய் தலை நிமிர்ந்து நின்றவள் இவள். இவளால் ஒதுக்கி வைக்கப்பட்ட குடும்பம், உறவுகள் அனைத்தும் சிறு ஒளிபெற்றது என்னவோ உண்மைதான் இவள் திரும்பி வந்த சிறுகாலத்தின் பின்.

எனினும் இவள் வாழ்வை வரவேற்கவோ, அல்லது ஆதரவு கொடுக்கவோ அப்போது பொறுப்பில் இருந்த மனிதர்கள் தயாராய் இருக்காததால் அவள் திருமணம் நடைபெற்றது. சிலரது திருமணங்கள் நரகத்திலும் நிச்சயிக்கப்படுகின்றன. இவளுக்கும் அங்குதான் என்பதை எடுத்துக் காட்டுவதாய் இவள் எதிர் கொள்ளும் சவால்க்ள் இப்போது சாட்சியாய் அமைகின்றன.



சிந்தனையில் வெளிநாட்டு வருமானம் வாயிலோ "பெண்ணுக்கு வாழ்வு" இப்படிப்பட்ட ஒருவனால் திருமண வாழ்வில் ஏமாற்றப்பட்டு மீண்டும் தாய்



தந்தையுடனும் புது உறவான மகனுடனும் ஓலைக் குடிசையில் நுழைந்த இவளை குடிசையில் குடி கொண்ட வெள்ளம் தான் வரவேற்றது. மகனை, வயது சென்ற தாயை, தகப்பனை பாதுகாக்க பிறரிடம் உதவிகள் பெற்று ஓலையாலும் தகரத்தாலும் கட்டியிருந்த இவளது குடிசையை தற்போது ஏற்பட்டுள்ள வெள்ளம் மீண்டும் பெரிதும் பாதித்துள்ளது. இவள் இவளது உறவுகளிடம் இருந்து பறிக்கப்பட்ட சமயம் இவர்களது காணிகள் பாடசாலைக்காக எடுத்துக் கொள்ளப்பட்டது. எனினும் அச்சமயம் திருமணமான இரு சகோதரிகளுக்கும் பதில் காணிகளாக சிறுதுண்டுக்காணிகள் வழங்கப்பட்ட போதிலும் இவள் தாய் தகப்பனுக்கு எதுவும் வழங்கப்படவில்லை.

"இருக்க இடம் எதுவும் இல்லாததால் அப்பா வெள்ளாம செய்யாமக் கிடந்த வரம்புக் காணி ஒரு துண்ட பத்தாயிரம் ரூபாய்க்கு வாங்கி அதுக்குள்ள தான் ஒரு குடில வச்சி நான் வரக்குள்ள அம்மாவும் அப்பாவும் இருந்தாங்க. பிறகு ஒரு லச்சம் அரசாங்க வீட்டுத் திட்டத்தில தந்தாங்க. அதில சீமெந்துக் கல்லால இரண்டு ரூம் உள்ள ஒரு வீட்ட கட்டினன். நிலம் இழுக்காட்டியும் சுவர் பூசாட்டியும் அதில வாழக் கூடியதாய் இருந்தது."

"இப்ப பெய்யிற மழையில வளவெல்லாம் சரியான தண்ணி. வெளியில தண்ணி நிக்கிறதால நிலத்திலயும் தண்ணி ஊறுது.. போனவருசம் நாங்க பள்ளிக்குள்ள இடம் மாறிப் போனம். ஆனா இந்த வருசம் ஒரு இடமும் போக ஏலா... போனவருசம் நிறுவனத்தால 50 கோழிகள் சுய தொழிலுக்கெண்டு தந்தவங்க. இந்த வெள்ளத்தில குளிர்,நசல் எண்டு கோழிகள் கனக்க செத்துப் போயித்து. கள்ளன் கொஞ்சத்த பிடிச்சித்துப் போயித்தான். இப்ப மிஞ்சி இருக்கிறது ஏழு கோழிகள் தான். இந்தத் தண்ணியால கொச்சிக்காத் தூள் பக்கட் பண்ணுற, மிக்சர் பக்கட் பண்ணுற சரியான கஸ்டம்".

வளவுக்குள்ள நிக்கிற தண்ணிகள வெளியேத்தவும் ஊரில ஒரு நடவடிக்கையும் எடுக்கப்படல்ல.

அப்படியே தண்ணி நிக்குது. இதால தொழிலுக்கு போகவும் கஸ்டம், நிவாரணம் எண்டு, இரண்டு கிழமைக்கு முந்தி எல்லாக் குடும்பத்துக்கும் ஒவ்வொரு தண்ணிபோத்தல் தந்தாங்க. ஊருக்கு ள்ளயும் வெள்ளாம செய்த சனங்கள் பாவம். கூடுதலாக நெல்லு மடியாக உள்ளது.

இந்த வெள்ளத்தில என்ர தங்கைக்கு டேட். வயிறு நோக சரியா கஸ்டப்பட்டுத்தா. மட்டக்களப்பு ஆஸ்பத்திரிக்குக் கொண்டுபோக ஒரு வாகனமும் இல்ல மோட்ட சைக்கிளில அவள நடுவில வைச்சிற்று பின்னால இருந்து நான் பிடிக்க அவளின்ர கணவர்தான் கஸ்டப்பட்டு மோட்டார் சைக்கிள் ஓட்டினார். வலயிறவுப் பாலத்தால போக கஸ்டம். இடுப்புக்கு மேல தண்ணி ஒரு இடத்தில நாங்க விழப் பாத்தம்... போய்க் கொஞ்ச நேரத்தில குழந்த கிடைச்சித்து.

நான் இப்படியே இருக்கேலா. நூறு ரூபா சீட்டுக் கட்டிவாறன். இந்த வருசம் அந்தக் காசு வரும். அதில வீட்டுக்கு கரண்ட் எடுக்கனும். கொச்சிக்காத் தூள், முட்ட வித்த காசில சேமிப்பாக கொஞ்சம் வரும். அதில மண்டபம் கட்ட யோசிச்சிருக்கன். மகன் சரியான குளப்படி படிக்க கள்ளம். வாற வருசம் பள்ளிக்கு சேக்கனும். நல்ல ஒரு ரீச்சரிட்ட அனுப்பி நல்லா படிப்பிக்க வைக்கனும். அவன சேக்க நல்ல பள்ளியத்தான் பாக்கனும்....

இவள் வரும் போது விட்டிருந்த மழை மீண்டும் கிழக்கு மூலையில அடை மழையாக கட்டத் தொடங்கியது. நனையப் போறாளே என எனக்குள் கவலை முளைக்கிறது. என்றாலும் அவளில் எந்த வித பதட்டமும் இல்லை. சாதாரண நடையுடன் வழமை போல் முட்டையை விற்றபடி புறப்படுகிறாள்.



## பெண்களை வலுப்படுத்தல்

சமாதன, சமத்துவ சந்தோச உலகே அனைவரும் வேண்டுவது. எனினும் தங்களைச் சுற்றி தாங்களே போடும் வேலிகளுக்குள் இறுகிக்கொள்வது இவர்கள் அறியாமல் நடந்து கொண்டு உள்ளது. காலம் காலமாய் உரமூட்டிய இவ் வேலிகளை உணர்வதும் உடைப்பதும் தாண்டுவதும் இலகுவான காரியமன்று. எனினும் உடைத்தே தீர வேண்டும்.

இதற்காக எமது கிராமங்களில் உருவாக்கப்பட்டுள்ள உப உதவிக் குழுக்களுக்கு பயிற்சிப் பட்டறைகளும் கலந்துரை யாடல்களும் நடைபெற்றுவருகின்றது. இதன் அடிப்படையில் கடந்த வருடம் 15.2.2012 அன்று "பெண்களின் தலைமை த்துவம் எவ்வாறு இழக்கப்பட்டது, அதிகார மையத்திற்குள் எவ்வாறு இவர்கள் உள்வாங்கப் பட்டனர், குடும்பம், உறவுகள் அதன் முக்கியத்துவம்" தொடர்பான முதலாவது பயிற்சிப்பட்டறை இடம் பெற்றது. இப் பயிற்சி வகுப்பின் போது சிறுவர் பெண்கள் உரிமைகள் அவர்கள் மன இயல்புகள் போன்ற விடயங்களும் பாதிக்கப்பட்டவர்கள் உதவி தேடிவரும் சந்தர்ப்பங்களில் எவ்வாறு உதவி செய்யலாம் எனும் விடயங்களும் பகிரப்பட்டது. முதலாவது பயிற்சிப்பட்டறையைத் தொடர்ந்து "சீடோ" சமவாயம், அதன் தோற்றத்திற்கான தேவைப்பாடு, நாடுகளிடையே பரவலாக்கம், அமுலாக்கம், தொடர்பான விளக்கப் பயிற்சிப்பட்டறை 26.09.2012 அன்று நடைபெற்றது. இப் பயிற்சிப் பட்டறையின் போது பொலிஸ் பிரிவுகள் (பெரும் குற்றப் பிரிவு, சிறுகுற்றப் பிரிவு, பெண்கள் பிரிவு, போக்குவரத்துப் பிரிவு,) அதன் பொறுப்புக்களும் கடமைகளும் தொடர்பு கொள்ளும் முறைகள் பற்றி விளக்கமளிக்கப்பட்டது.

உப உதவிக் குழுக்கள் தங்கள் அனுபவங் களைப் பகிர்ந்து கொள்வதற்காக 11.11.2012 அன்று இவர்களுக்கான அனுபவப் பகிர்வு கூட்டம் இடம் பெற்றது. இக் கூட்டத்தில் குழுக்களாக இவர்கள் மேற்கொண்ட பணிகள், வெற்றிகள், எதிர்கொண்ட சவால்கள், கற்றுக்கொண்டவை, தனிச்



செயற்பாட்டினதும் குழுச் செயற்பாட்டினதும் வித்தியாசம் போன்ற விடயங்களை இவர்கள் கலந்துரையாடினர். மற்றும் இவ்வாறான சந்திப்புக் களால் கிடைத்த பலரது அறிமுகம், தொடர்ந்து தாம் தொடர்புகளை மேற்கொண்டது அதன் தேவைப்பாடு, இதனூடாக கிடைத்த ஒத்துழைப்புக்கள் போன்ற விடயங்களையும் பகிர்ந்து கொண்டனர்.

பெண்களின் அபிவிருத்திக்கான செயற்பாடு களில் ஒன்றாக அவர்களது வாழ்வாதார தொழிலை முன்னேற்றும் செயற்பாட்டிற்காக தாழங்குடாவில் 25 பெண்களுக்கு பனம் பொருள் பயிற்சி, வர்த்தக சம்மேளனத்திற்கூடாக வழங்கப்பட்டது.

வர்த்தக சம்மேளனத்துடன் இணைந்து 12.10.2012 – தொடக்கம் 15.10.2012 வரை சர்வதேச வர்த்தகக் கண்காட்சி நடைபெற்றது. தொடர்ந்து வியாபாரத்தைப் பதிவு செய்தலின் முக்கியத்துவம் பற்றிய பயிற்சியும் விளக்கமும் வழங்கப்பட்டதுடன் வியாபாரத்தைப் பதிவுசெய்யும் நடவடிக்கையும் மேற்கொள்ளப்பட்டது.



**"கலைகளின் பாசை பொது மொழி ஆகும் வார்த்தைகள் தேவையில்லை உணர்வுகள் போதும் - நீண்ட உறவுகள் வளர "**



எமது சமூகம் என்னதான் நவீன யுகத்தில் பிரவேசித்தாலும் மற்றும் நவீனங்களை உள்வாங்கி னாலும் இன்று வரை பிற்போக்கான கருத்துக்களும் மூட நம்பிக்கைகளும் வாழாமல் இல்லை. இதனால் பெண்கள் பலர் பல பிரச்சனைகளை எதிர்கொள்வ துடன் அனேக குடும்பங்கள் வன்முறைகளுக்கும் உள்ளாக வேண்டியுள்ளது. இவ்வாறான சந்தர்ப் பங்களில் மக்களுடன் ஆழமான விடயங்களை இலகுவாய்ப் பேசுவதற்காய் கலாசாரக் குழுவினரின் அளிக்கைகள் பெரிதும் பங்கு வகித்து வருகின்றது.

# அக்கரைப்பற்றுபெண்கள் அமைப்பு (அவா)

அக்கரைப்பற்று பெண்கள் அமைப்பானது பெண்கள் ஊடான சமூக மறுமலர்ச்சி என்ற தூர நோக்கினை அடைந்து கொள்வதற்காக 1997ம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டது. பெண் தலைமைத்துவக் குடும்பங்களை இலக்குக் குழுக்களாகக் கொண்டு செயற்பட்ட இவ் அமைப்பில் ஆரம்பத்தில் 21 அங்கத்தவர்கள் அங்கம் வகித்தனர். இருப்பினும் அனைத்துப் பெண்களுக்காகவும் செயற்படவேண்டிய தேவையும் அவசியமும் ஏற்பட்டதனால் சகல பெண்களையும் இணைத்து தற்போது இவ் அமைப்பு இயங்கிக் கொண்டிருப்பதுடன் தற்போது அதன் செயற்பாடுகளும், அங்கத்தவர்களும் அதிகரித்துக் கொண்டு செல்கின்றமையை காணலாம்.

2010 இல் இருந்து பெண்களுக்கான வாழ்வாதார வழிகாட்டுதல்கள், கல்விக்கான உதவிகள், சுகாதாரச் செயற்பாடுகள், குடும்பங்களில் ஏற்படும் பிரச்சினை களைக் கையாளல், சமூக அணிதிரட்டலும் ஊக்கு விப்பும், தமிழ் முஸ்லிம் மக்களிடையே சமாதான சகவாழ்வை ஏற்படுத்தல், பெண்களைப் பலப்படுத்தல், பெண்களையும் சிறுவர்களையும் பாதுகாப்பதற்கான

பொறி முறைகளை உருவாக்குதல் போன்ற செயற்பாடுகளை பல உத்திகளுக்கூடாக மேற் கொண்டு வருகின்றது.

இதன் முக்கிய செயற்பாடாக இன நல்லுற விற்கான மேம்பாட்டுக் குழு ஒன்று அமைக்க ப்பட்டது. இதில் தமிழ் முஸ்லிம் சமூகப் பொறுப்பு வாய்ந் தவர்கள் அங்கம் வகிக்கின்றனர். மற்றும் நிறுவன முகாமைத்துவம், (இதில் பெண் தலைமைத் துவப் பெண்களும், குழுத்தலைவிகளும் கலந்து கொண்ட னர்), தலைமைத்துவம் தொடர்பான பயிற்சிப் பட்டறைகள் நடத்தப்பட்டது. அத்துடன் பெண்கள் பிரச்சனைகளைப் பேசக் கூடிய பிரதேச ரீதியான வலையமைப்பு ஒன்றும் அமைக்கப்பட்டுள்ளதுடன், குழுவாக இயங்கக் கூடிய பொறிமுறை ஒன்றும் உருவாக்கப்பட்டுள்ளது.


கடந்த வருட முக்கிய நிகழ்வுகளில் ஒன்றாக இன முரண்பாடுகள் ஏற்பட்ட காலங்களிலும் சமாதான காலத்திலும் எவ்வாறு இரு இன மக்களும் ஒற்றுமையாக இணைந்து வாழ்ந்தனர் எனும் தமது அனுபவங்களைப் பகிர்ந்து கொண்ட ஒன்று கூடல் இடம் பெற்றது. அத்துடன் இன நல்லுறவை மேம்படுத்துவதற்கான வாசிகசாலை ஒன்று அமைக்கப்பட்டு இயங்கி வருகின்றது. இவைகளை நோக்குகின்றபோது எதிர்காலத்தில் சமூக அபிவிருத்தி நோக்கிய பயணத்திற்கு இவ் அமைப்பானது கலங்கரை விளக்காக அமைந்துள்ளது என்பது தெளிவு.

தகவல்

எஸ்.எம். பாத்திமாபாஹிறா

அக்கரைப்பற்று பெண்கள் அமைப்பு





## இது வயது வந்தோர் உரிமைகள் மட்டுமல்ல

## கவனம்

## இதுவே நாளை நமது உரிமைகள்

*இது யாவரும் அறிந்த கதைதான்*

*என்றாலும்*

*மீண்டுமொருதரம்....*

"ஒரு நாள் மகன் தன் தகப்பனுக்கு உணவு கொடுத்து வந்த சிரட்டையைக் காணாது தேடிக் கொண்டிருந்தான். இதைப் பர்த்துக் கொண்டிருந்த அவனது மகன் சொன்னான் "அப்பா அதைத் தேடாதீங்க நான்தான் அதை கவனமாக வைச்சிருக்கன் நானும் உங்களுக்கு சாப்பாடுதர..."

பழுத்தோலை விழ குருத்தோலை சிரித்தது அந்தக் காலம். இன்று குருத்தோலைகள் சிந்திக்கத் தொடங்கி விட்டன தமது பழுப்பைப் பற்றி...

அந்த வகையில் இன்று எதிர்கால சேமிப்புப் போன்று வயது வந்தோர் உரிமைகளும் கவனத்திற் கொள்ளப்பட வேண்டும் எனும் கருத்திற்கமைய மட்டக்களப்பு மனித உரிமை ஆணைக்குழுவில் 10.08.2012 அன்று ஓர் கலந்துரையாடல் இடம் பெற்றது. இங்கு வயது வந்தோர் தொடர்பான பாதுகாப்பு நடைமுறைகள், அவர்கள் உரிமைகள் போன்ற விடயங்கள் கலந்துரையாடப்பட்டது.

### முதியோர் நலனுக்கான நடைமுறைகள்

முதியோர் அடையாள அட்டை

முதியவர்கள் தங்களுக்கான கௌரவத்தை பெறல் - இதற்காக முதியோர் அடையாள அட்டை வழங்கப்படுகிறது.

இதனால் சுகாதார, போக்குவரத்து சேவைகளை இலகுவாகப் பெற்றுக் கொள்ளலாம். தனியார், அரசாங்க அலுவலகங்களில் ஏற்படும் சிரமங்களைத் தவிர்க்கலாம்.

### முதியோர் சங்கம்

இது பின்வரும் அடிப்ப டையில் அமைக்க ப்படும்.



கிராமிய மட்டம்

பிரதேச மட்டம்

மாவட்ட மட்டம்

மாகாண மட்டம்

தேசிய மட்டம்


- பகல் நேர பராமரிப்பு நிலையங்கள்
- சமூர்த்தி கொடுப்பனவு.

சமூர்த்தி கொடுப்பனவு பெற்று வந்த 70 வயதுக்கு மேற்பட்டவர்களுக்கு மாதாந்த கொடுப்பனவான ஆயிரம் ரூபாய் கொடுப்பனவு கொடுத்தல் (இத் தகவல் கூறப்படும் போது வருகை தந்தவர்கள் இச் செயற்பாட்டின் மூலம் முதியவர்கள் பெரும் அசௌகரியங்களை எதிர்நோக்கியுள்ளனர் எனக் கூறினர். அதாவது இக் கொடுப்பனவு கொடுப்பதற்காக முதியவர்களை பல தடவைகள் அழைத்து அவர்களது தகவல்களை பெறும் பொறுட்டு சிரமப் படுத்தியுள்ளனர் எனக் கூறப்பட்டது.)

- முதியோர் உரிமைகள் தொடர்பான விழிப் புணர்வு பயிற்சிகள்.
- முதியோர் இல்லங்களை கண்காணிப்பதற்கான திட்டங்கள். முதியோர் இல்லம் என்ற பெயரில் நடாத்தப்படும் எச்செயற்பாடும் தேசிய செயலகத்தில் பதியப்படவேண்டும். அதாவது முதியோர் இல்லம் என்ற பெயரில் 5 பேரை வைத்து பராமரித்தாலும் பதியப்படவேண்டும்.


## முதியோர்கள் தொடர்பான பிரச்சனைகளும் அப் பிரச்சனைகளுக்கு முன்வைக்க கூடிய சிபார்சுகளும்

- ❖ பேரூந்துகளில் கர்ப்பிணித் தாய்மார்கள், மதகுருமார்களுக்கு என்று ஒதுக்கப்படும் ஆசனங்கள் போன்று முதியோருக்கும் ஆசன ஒதுக்கீடு செய்யப்பட வேண்டும்.
- ❖ பிள்ளைகளால் பெற்றோர் பராமரிக்கப்பட வேண்டும்.
- ❖ பொலிஸ் நிலையங்களில் முதியோருக்கு முன்னுரிமை வழங்கப்பட வேண்டும்.
- ❖ முதியோர்களுக்கான ஆவணங்கள் இல்லாமை பிரச்சனைகள் தீர்த்து வைக்கப்பட வேண்டும்.
- ❖ முதியோர்களின் கருத்துக்கள் பகிர்ந்து கொள்வதற்காக முதியோர்கள் ஒன்றாக இணைக்கப்படுதல்.
- ❖ முதியோர்கள் தங்களது ஓய்வு நேரங்களை பயனுள்ள முறையில் பயன்படுத்த ஓய்வுநேர இடங்களை ஏற்பாடு செய்தல்.
- ❖ முதியோர்களுக்கான உள, நல ஆற்றுப் படுத்தல்களை வழங்கல்.
- ❖ முதியோர்களுக்காக நடமாடும் வைத்திய சேவைகள் மாதத்திற்கு ஒருமுறை நடத்தப்படல்.
- ❖ முதியோர்களுக்காக அமைக்கப்பட்ட சங்கங்களை செயற்பட வைத்தல்.
- ❖ கிராமப் புறங்களில் உள்ள முதியோர்கள் அதிகமாக பாதிக்கப்படுகிறார்கள். அவர்களுக்கு பகல் நேர பராமரிப்பு நிலையங்களும், வைத்திய ஆலோசனைகளும், உதவிகளும் கொடுக்கப்பட வேண்டும்.
- ❖ முதியோர்களுக்கான கல்வித் திட்டம் ஒன்றை நடைமுறைப்படுத்தல்.
- ❖ ஊனமுற்ற முதியோர்களுக்கான விசேட ஏற்பாடுகள் செய்தல்.
- ❖ மத்தியகிழக்கு, ஆசிய நாடுகளுக்கு வேலைக்காக செல்பவர்கள் முதியவர்களிடம் பிள்ளைகளை பராமரிப்பதற்காக விட்டுச் செல்வது பிள்ளைகளுக்கும் முதியோருக்கும் மேலதிக பாதிப்பை ஏற்படுத்துகின்றது. இதனை நிவர்த்தி செய்ய நடவடிக்கை எடுத்தல்.
- ❖ குடும்ப பிணைப்புக்கள் மீள் கட்டமைக்கப்பட வேண்டும்.



# ஞாபகங்கள்

"பெண்களது வாழ்க்கை" ஆவணத் தொகுப்பு




**நிகழ்காலத்தை நடத்துவதும் எதிர்காலத்தை உருவாக்குவதும் இறந்த காலத்தின் சுவாசமே**

நேற்று போட்டது போட்ட படியே கிடக்க வாசலில் நின்று கூப்பிடும் "நாளை"யை நோக்கி ஓடிக் கொண்டேயிருக்கிறோம். "நேற்று" அதன் பின் யாராலும் எடுத்த வைக்கப் படவேயில்லை. அது திரும்பிப் பார்க்கப்படாமல் அப்படியே கிடக்க அதன் சுவாசம் மட்டும் உள்ளாடும் உயிராய் எம்முடனே எமக்கே தெரியாமல் இறுதிவரை தொடர்கிறது.

ஒவ்வொரு பெண்ணினதும் வாழ்வும் எதிர்கால சந்ததிக்கான உயிராவணமாகும். காலங்கள் ஒருபோதும் கருகிவிடுவதில்லை. அது வழிகாட்டும் நட்சத்திரமாய் எம் முன்னே செல்கிறது. நாங்கள் நேற்றைக்குள் சென்று வருவது நாளைக்குள் வாழ்வதற்கே...

இங்கு நீங்கள் காண்பது எங்கள் ஒவ்வொருவரினதும் வாழ்வின் சிலபக்கங்களை.. நாங்கள் 7 பெண்கள் மீட்டாத எங்கள் கதைகளை எங்கள் ஞாபங்களை மீண்டும் ஒருதரம் திரும்பிப் பார்த்தோம் அது ஆரம்பம் மார்ச் 2012.

அதைத் தொடர்ந்து வந்த 3 மாதங்களும் . கடந்திருந்த ஞாபங்களுள் பல தடவைகள் வாழ்ந்தோம். இன்று வரை வாழ்கின்றோம். சிறுமிகளாய் ஆனோம். கனவுகள் கண்டோம்.. எம் சின்னக் கண்கள் எமக்கு மீண்டும் கிடைத்தன. எத்தனை மனிதர்களை நாங்கள் சந்தித்திருந்தோம். அவர்கள் தூரச் சென்றவர்கள். எனினும் அருகிருந்தார்கள். சிந்திக்க வைத்தார்கள். நாங்கள் இழந்தவைகள் எதையும் எங்கள் காலங்களுக்குள் நாங்கள் இழக்கவேயில்லை. மீண்டும் அவர்களுடன் வாழ்ந்தோம். அவைகளைக் கண்டோம்.

கண்ணீர்க் கதைகள் எங்கள் கண்களை நிறைத்தது. நினைவஞ்சலிகள் தயாரித்து பூக்கள் புனைந்தோம். பத்திரப்படுத்த பாதுகாப்பும் உண்மையும் உள்ள இடம் இது என நாம் கண்டதால் உங்களுடன் பகிர்கின்றோம் எம் நினைவஞ்சலிகளை.

கஸ்டமான காலங்களை நினைவு கூறும் சந்தர்ப்பங்களில்...... என்றாலும் மகிழ்வுடனும் எதிர்பார்ப்புக்களுடனும் நாம் வாழ்ந்த காலங்கள் அவை. எங்கள் நிகழ்காலங்கள் இறந்த காலங்களில் வாழ்ந்து கொண்டிருக்கும் சந்தர்ப்பங்கள் இவை.

கனமான நினைவுகள் எனினும் அவை எங்களுக்கு பவித்திரமானவை. ஒருவர் உணர்வை ஒருவர் புரிந்து கொண்டோம். விதவிதமான நினைவுகள் எனினும் மதிப்பில் அனைத்தும் சமனானதே.. நீண்ட காலமாய் எமக்கே நாம் மூடி வைத்திருந்த நினைவின் கதவுகளைத் திறந்தோம். திறக்க வைத்தது. எங்களுக்குள் இருந்த உண்மை, மதிப்பளிக்கும் மனம், நம்பிக்கை காக்கும் திறன். இன்று எங்கள் வாழ்வின் சில சிதறல்களைப் பார்க்கும் நீங்களும் எங்களில் ஒருவராய் எம் உண்மை காப்பீர்கள் என நம்புகிறோம்.

கடந்த எம் ஞாபகங்களை ஏன் நாம் மீண்டும் கொண்டு வரவேண்டும்?. உங்கள் முன் சிதறிக் கிடக்கும் எம் வாழ்வின் சில பக்கங்கள், சில பாதச்சுவடுகள் இனி எங்களை புதிய பாதைக்கு இட்டுச் செல்லும் என்பதுடன் எங்கள் சந்ததிக்கு எங்கள் வாழ்வின் பெறுமதியைப் பத்திரமாக கொடுக்க விரும்புகிறோம்.. அதற்கான முயற்சியே இது. பல படிமுறைகளுக் கூடாகவும் சில பயிற்சிகளுக்கூடாகவும் எங்கள் ஞாபகங்களை நாம் மீட்டெடுத்தோம். குழுவாக இருந்தோம் வீட்டுச் சந்திப்புக்களை மேற்கொண்டோம் அனைத்திலும் உண்மையிருந்தது. அதற்குப் பெறுமதியிருந்தது.

இவை எங்கள் தனிப்பட்ட நினைவுகளின் பகிர்வுகளாய் தொகுக்கப்பட்டாலும் தனிப்பட்டவை அல்ல. எமது அனைவரதும் காலப்பகுதியை அக் காலங்களின் கதைகளை எம் வாழ்வு முறைகளை மூதாதையரின் கதைகளை காட்டும் கண்ணாடிகள். வாய் மொழியாகவும் எழுத்துக்களாகவும் காட்சிப் படுத்தல்களாகவும் எமது வாழ்வின் கதைகளைக் காணும் போது இந்த அமைதியான சூழல் உங்களுக்குள்ளும் அலை என உங்கள் கடந்த காலங்களைக் கொண்டுவரும். எழும் உங்கள் கடந்த காலக் கதைகளின் சில பகுதிகளை எங்களுடன் விட்டு விட்டுச் செல்லுங்கள். இது முடிவல்ல நாம் ஒருவருக்கொருவர் உண்மை உள்ளவர்களாய் மீண்டும் எமக்கான அடுத்த பயணத்தை நம் கதைகளில் இருந்தே ஆரம்பிப்போம்.



சூரியா பெண்கள் அபிவிருத்தி நிலையம்,

இல.55, லேடி மன்னிங் டிறைவ்,

மட்டக்களப்பு.

தொ. பேசி :065 222 3297

முகவரி :.................................

.................................

.................................

.................................